நரசிங்கபுரம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: செல்வி.அ.பவித்ரா, B.Sc(Agri).,

ந.க.எண். 652/2025/எப்1, நாள்.04.02.2026

பொருள்: மனைப்பிரிவு – நரசிங்கபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நரசிங்கபுரம் கிராம புல எண்.262/1B3 மற்றும் 262/2B2–இல் அமைந்துள்ள 2407.88 ச.மீ உள்ள இடத்தினை 13 மனைகளாக பிரித்து அமைக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. திரு.P.V.கலைச்செல்வன் த/பெ வேலுசாமி என்பவரின் மனு நாள்.19.06.2025.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களின் கடித ந.க.எண். Roc.No.SLM/MS79AEDT/39210/2025/2025/TCP, நாள்.29.05.2025
3. நகரமன்ற தீர்மான எண்.504, நாள்.29.07.2025.
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு நாள்.02.02.2026.

பார்வை 1–இல் காணும் தங்களின் விண்ணப்பத்தில் நரசிங்கபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நரசிங்கபுரம் கிராம புல எண். 262/1B3 மற்றும் 262/2B2–இல் அமைந்துள்ள 2407.88 ச.மீ உள்ள இடத்தினை 13 மனைகளாக பிரித்து அமைக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க கோரியுள்ளீர்.

பார்வை 2–இல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களின் கடிதத்தில் நரசிங்கபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள கிராம புல எண். 262/1B3 மற்றும் 262/2B2–இல் அமைந்துள்ள 2407.88 ச.மீ உள்ள இடத்தினை 13 மனைகளாக பிரித்து அமைக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு (SWP/DTCP/SALEM/LAYOUT NO.177/2025) மா.வ/ந.ஊ.உ.இ(சே.மா) எண்.177/2025 என எண்ணிடப்பட்டு பல்வேறு நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ள மனைகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பார்வை 3–இல் காணும் இந்நகர்மன்ற தீர்மான எண்.504–இல் சிறப்பு நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நடவடிக்கை மேற்கொள்ளவும், மனைப்பிரிவு அனுமதி அளிப்பதற்கான கட்டணங்களை வசூலிக்கவும், பொது உபயோக இடத்தினை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யவும், அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 4–இல் காணும் இவ்வலுவக அறிவிப்பில் மனைஉட்பிரிவு இறுதி ஒப்புதல் அளிக்க ஆய்வு கட்டணம் ரூ.5000/– வைப்புத் தொகை ரூ.100000/– மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.9000/– நிலப்பயன் மாற்றக் கட்டணம் ரூ.12500/– பரசீலனை கட்டணம் ரூ.13000/– மற்றும் கொடி நாள் ரூ.10000/– சம்மந்தப்பட்ட கணக்கில் செலுத்தி அதற்கான நகலை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது.

பார்வை 4–இல் காணும் இவ்வலுவலக அறிவிப்பின்படி மனை உட்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்க கூராய்வு கட்டணம் ரூ.5000/– வைப்புத் தொகை ரூ.100000/– மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.9000/– கொடி நாள் ரூ.10000/– மற்றும் பரிசீலனை கட்டணம் ரூ. ரூ.13000/– ஆகிய கட்டணங்களை பற்றுச்சுட்டு எண்.048/01/3/25–26/0011431, நாள்.03.02.2026 அன்று கருவூலத்தில் செலுத்தி இரசீது நகலை சமர்ப்பித்துள்ளீர். மேலும், நிலப்பயன் மாற்றக்கட்டணம் ரூ.12500/– அரசு தலைப்பு (021760800AS22709) கணக்கில் பற்றுச்சீட்டு எண்.20260204005307 நாள்.04.02.2026 அன்று செலுத்தப்பட்டதற்கான நகலை சமர்ப்பித்துள்ளீர்.

எனவே, கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

Online Registration No.	Village	T.S.No / R.S.No	Plot No.	Extent in (SQ)m
SWP/DTCP/SALEM/ LAYOUT NO.177/2025	NARASINGAPURAM	262/1B3 மற்றும் 262/2B2	1 to 13	2407.88 ச.மீ

நிபந்தனைகள்

1. அரசாணையின்படி, குடியிருப்பு மனைப்பிரிவு மட்டுமே இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் இம்மனைக்கு / மனைகுடியிருப்பு உட்பிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் ஆணை எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
3. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA–1) நாள்.04.02.2019–இன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
4. அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA–1) நாள்.31.01.2020–இன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனையிட வரைப்படத்தினை எவ்வித மாற்றமும், விடுதலின்றி மனை உட்பிரிவின் நுழைவாயிலில் 6X4 அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6. நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் அனுமதி செல்லதக்கதல்ல.
7. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களின் நடவடிக்கையில் மா.வ/ந.ஊ.உ.இ (சே.மா) எண்.177/2025–இல் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளை கட்டாயமாக பின்பற்ற வேண்டும்.

4/2/2026

ஆணையாளர்,
நரசிங்கபுரம் நகராட்சி.

பெறுநர்:

P.V.கலைச்செல்வன்,
க/பெ வேலுசாமி,
மாமரத்துக்காடு, வலையமாதேவி,
ஆத்தூர் வட்டம்,
சேலம் மாவட்டம்.

4.2.26